தேதி.04.08.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.74/2022 திரு.மயில்சாமி, த/பெ.கொமரசாமிகவுண்டர் வா.சா.1

<u>வா.சா.1:சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய பூமியை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு தவறாக எழுதி வைத்துவிட்டார். அதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் 1ம் பிரதிவாதி என் தகப்பனார், 2ம் பிரதிவாதி என் தகப்பனாரின் 2ம் மனைவியாவார். எனது தந்தை எனது பராமரிப்பில் இருந்து வருகிறாரா என்றால் இல்லை. தனியாக இருந்துவருகிறார். விவசாயம் செய்து வருகிறார். எனது தந்தைக்கு படிப்பறிவு இல்லை. எனது தகப்பனார் யாருடைய பராமரிப்பில் இருந்து வருகிறார் என்றால் 2ம் பிரதிவாதியுடன் இருக்கிறார். எனது தகப்பனாருக்கு எத்தனை வயது என்றால் 85 வயது ஆகும். 1வது அயிட்ட சொத்தை எவ்வளவு கிரையத்தொகைக்கு வாங்கினேன் என்றால் ரூபாய் எழு லட்சத்திற்கு வாங்கினேன். எங்கு வைத்து கிரையத்தொகையை கொடுத்தேன் என்றால் சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்தேன். நான் பணம் கொடுக்கும்போது யார் உடன் இருந்தார்கள் என்றால் இரண்டு பிரதிவாதிகள், எனது மாமா சக்திவேல், மைத்துநர் சக்திவேல், வேறு ஒரு நபர், மற்றொரு மாமா இருந்தார்கள். இவர்களை விசாரிக்க எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். மாரப்பன், சக்திவேல் யார் என்றால் மாரப்பன் என்னுடைய மாமா. சக்திவேல்

என்னுடைய மாமா பையன் ஆவார்கள். வா.சா.ஆ.1ல் நான் இரண்டு லட்சத்தில் எழுபத்தி ஆறாயிரம் என்று சொல்லியிருந்தால் அது தவறாகும் என்றால் சரிதான். நான் பணத்தை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கொடுத்தேன். வா.சா.ஆ.2ல் உள்ள 2வது அயிட்ட சொத்தை யார் எல்லாம் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் நான், எனது தகப்பனார், பழனிச்சாமி, சம்பத். வா.சா.ஆ.2ஆன பாகப்பிரிவினை பத்திரமானது யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நாங்கள் நான்கு பேரும் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. வா.சா.ஆ.2ல் என்ன உள்ளது என்று எனது தகப்பனாருக்கு தெரியுமா என்றால் படித்துக்காண்பித்து தான் கையெழுத்து செய்தார். யார் படித்து காண்பித்தார்கள் என்றால் பத்திர எழுத்தர் படித்து காண்பித்தார். எனது தகப்பனாருக்கு படித்து காண்பிக்கும்போது யார் உடன் இருந்தார்கள் என்றால் நாங்கள் மட்டும் தான் இருந்தோம். வா.சா.ஆ.2ல் உள்ள சாட்சிகளின் முன்னிலையில் படித்து காண்பிக்கப்பட்டதா என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், என் தந்தைக்கு வா.சா.ஆ.2ல் என்ன உள்ளது என்று தெரியாது என்றால் சரியல்ல. யார் யாருக்கு என்னனென்ன விஸ்தீர்ணம் பிரிக்கப்பட்டது என்றால் ஏ செட்டியூல் எனது தந்தைக்கு 36 செண்ட்டும், எனக்கு பி செட்டியூலில் 51 1/2 செண்ட்டும், சம்பத்திற்கு காலை எண்.218ல் 51 1/2 செண்ட்டும், பழனிச்சாமிக்கு வாய்க்கால் புதூரில் உள்ள எனது பாட்டி சொத்தை கொடுத்துவிட்டார்கள். பாகப்பிரிவினை சொத்தானது ஏ செட்டியூல் சொத்தில் பழைய வீடு உள்ளது, அதில் தான்எனது தகப்பனார் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வீட்டை பற்றி வா.சா.ஆ.2ல் எழுதவில்லை என்றால் சரிதான். ஏன் எழுதப்படவில்லை

என்றால் அப்பா இருக்கும் வரை இருக்கட்டும் அதன் பின்னர் அவர்களது மகன்கள் பிரித்துக்கொள்ளலாம் என்று இருந்தோம். நாங்கள் பாகம் பிரித்துக்கொண்ட சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்டது. எனது அம்மா காளியம்மாள் என்ன வேலை செய்தார் என்றால் விவசாயம் செய்து வந்தார். எனது அம்மாவின் பெயரில் எவ்வாறு பூமி வந்தது என்றால் எனது அம்மாவின் அப்பா வாங்கிய பூமியாகும். நான் சொல்வது தவறு என்றும், எனது தகப்பனார் வாங்கி எனது அம்மாவின் பெயரில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. 1வது அயிட்ட சொத்து எனது அப்பாவிற்கு எப்படி பாத்தியம் என்றால் நான், என் தந்தை என் சகோதரர்கள் அனைவரும் கூட்டாக சம்பாதித்து வாங்கிய சொத்தாகும். 1வது அயிட்ட சொத்து எப்போது வாங்கப்பட்டது என்றால் 1996ம் வருடம் இருக்கும். நான் சொல்வது பொய் என்றும், எனது தகப்பனார் 1970ம் ஆண்டே மேற்படி சொத்தை வாங்கிவிட்டார் என்றும், எனக்கு அந்த சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், நான் மகன் என்ற பாசத்தினால் எந்த பணமும் பெறாமல் எனக்கு எழுதி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வயோதிகத்தின் காரணமாக 2ம் பிரதிவாதியின் பராமரிப்பில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். நாங்கள் மூன்று மகன்களும் என் தந்தையின் பராமரிப்பு செலவுகளை பார்த்துக்கொள்கிறோமா என்றால் இல்லை. என் தந்தை அவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்களை தான் 2ம் பிரதிவாதிக்கு எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. ஏ செட்டியூல் சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த ஏ செட்டியூல் சொத்தை தான் 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்து விட்டார் என்றால் ஏ செட்டியூல் சொத்துடன் சேர்த்து

அருகில் உள்ள என்னுடைய பி செட்டியூல் சொத்தையும் சேர்த்து எழுதி வைத்துவிட்டார். நான் சொல்வது தவறு என்றும், என் தந்தைக்கு பாத்தியப்பட்ட ஏ செட்டியூல் சொத்தில் உள்ள வீட்டையும், கிணறு பாகத்தையும் தான் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. கிணறானது யாருக்கு பாத்தியம் என்றால் எனது சகோதரர்களுக்கும், எனது தகப்பனாருக்கும், எனது சின்னம்மாளுக்கும் பாத்தியம். வா.சா.ஆ.2ஆன பாகப்பிரிவினை பத்திரத்தின் படி எனது தகப்பனாருக்கு அனுபவ பாத்தியம் மட்டும் தான் உள்ளது என்றும், அவருடைய காலத்திற்கு பின்னர் எங்களுக்கு மட்டும் பாத்தியம் என்ற விவரம் எனது தகப்பனாருக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வது தவறு என்றும், எனது தகப்பனாருக்கு எந்த சொத்தும் தரக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் வா.சா.ஆ2 எழுதப்பட்டுள்ளது என்றும், என் தந்தைக்கு படிப்பறிவு இல்லாத காரணத்தினால் அவரை ஏமாற்றி தற்போது தொள்ளை கொடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் வீட்டை பற்றி சொல்லவில்லை என்றும், அதில் அவருக்கு முழு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் 85 வயதான எனது தகப்பனாருக்கு எந்த பராமரிப்பும் செய்யாமல் சொத்தை அபகரிக்க வேண்டும் என்று கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரை 2ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியின் மகள்களும் தான் பராமரித்துக் கொள்கிறார்கள் என்றும், அதனால் தான் என் தந்தை 2ம் பிரதிவாதியின் பெயரில் சொத்தை எழுதிவைத்தார் என்றும், அதை பிடிக்காமல் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது தகப்பனார் சம்பாதித்த சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு உரிமையில்லை என்றும்,

அயிட்ட 3வது சொத்திற்கான தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று சொல்ல எனக்கு அறுகதையில்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.